# செயலாற்றுகை அறிக்கை 2016

## தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்
## நிதி அமைச்சு

## உள்ளடக்கம்


| அத்தி. இல. | | விடயம் | பக்கம் |
|---|---|---|---|
| **01.** | | **மேன் நோக்கு** | **01** |
| | 1.1 | தூர நோக்கு | 01 |
| | 1.2 | பணிக்கூற்று | 01 |
| | 1.3 | இலக்குகள் | 01 |
| | 1.4 | பணிகளும் பொறுப்புக்களும் | 01 |
| | 1.4.1 | தேசிய வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரித்தல் | 01 |
| | 1.4.2 | தேசிய வரவு செலவுத்திட்டத்தினைச் செயற்படுத்தல் | 02 |
| | 1.4.3 | முற்பணக் கணக்கு செயற்பாடுகள் | 02 |
| | 1.4.4 | வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டு செயற்பாட்டை கண்காணித்தல் | 02 |
| | 1.4.5 | நிகழ்ச்சித்திட்டம்/கருத்திட்டத்திற்கான நிதி வளங்களை ஒதுக்கீடு | 03 |
| **02.** | | **வரவு செலவுத்திட்ட மீளாய்வு மற்றும் செயற்படுத்தல் - 2016** | **05** |
| | 2.1 | ஒதுக்கீட்டுச் சட்டம் 2016 | 05 |
| | 2.2 | 2015 இன் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கான திருத்தம் | 06 |
| | 2.3 | எதிர்பாரா செலவு நிதியத்தின் பயன்பாடு | 07 |
| | 2.4 | குறைநிரப்பு மதிப்பீடுகள் | 07 |
| | 2.5 | எதிர்பாரா செலவு நிதியத்திலிருந்து நிதி விடுவிப்பு | 07 |
| | 2.6 | குறைநிரப்பு ஒதுக்கீடாக விசேட சட்ட ஆணைப்பத்திரம் | 08 |
| | 2.7 | வரவு செலவுத்திட்ட செயலாற்றுகை 2016 | 09 |
| | 2.8 | நடுத்தரகால செலவின வேலைச்சட்டகத்தில் 2016 வரவு செலவுத்திட்ட துறைரீதியான கண்ணோட்டம் 2016 - 2018 | 12 |
| | 2.9 | 2016 வரவு செலவுத்திட்ட முகாமை | 13 |
| | 2.9.1 | நிதி மாற்றல்கள் | 13 |
| | 2.9.2 | குறைநிரப்பு ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள் | 13 |
| | 2.9.3 | வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபங்களை வெளியிடுதல் | 14 |
| **03.** | | **2017 இற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்** | **15** |
| | 3.1 | வரவு செலவுத்திட்ட தயாரிப்புக்கான வழிகாட்டல்கள் | 15 |
| **04.** | | **விசேட செயற்பாடுகள்** | **15** |
| | 4.1 | அரசாங்க தொழில் முயற்சிகளின் வரவு செலவுத்திட்ட முகாமை | 15 |
| | 4.2 | அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பான அவதானிப்புகள் | 16 |
| | 4.3 | வாகனங்கள் கொள்வனவுக்கான அங்கீகாரம் | 16 |
| | 4.3.1 | வாகனங்கள் கொள்வனவுக்கான தேசிய வரவு செலவுத்திட்ட அங்கீகாரம் | 16 |
| | 4.3.2 | அரசாங்கத் துறைக்கான வாகனங்கள் கொள்வனவு | 17 |
| | 4.4 | சபைகளிலும் குழுக்களிலும் பதவியினரின் பங்குபற்றுதல் | 17 |
| **05.** | | **தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்கள நிறுவனக் கட்டமைப்பு** | **18** |
| | 5.1 | பதவியணி | 18 |
| | 5.2 | மனிதவள அபிவிருத்தி | 19 |
| | 5.2.1 | வெளிநாட்டு பயற்சி/கருத்தரங்குகள்/கூட்டங்கள் | 20 |
| | 5.2.2 | உள்நாட்டு பயிற்சி | 21 |
| | 5.3 | தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் நிதி நிர்வாகம் | 23 |
| | 5.3.1 | முற்பணக் கணக்கு செயற்பாடுகள் | 23 |
| | 5.3.2 | கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு வினாக்கள் | 24 |
| | 5.4 | நிறுவனக் கட்டமைப்பு | 25 |

# 1. மேன் நோக்கு

தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களமானது பாராளுமன்ற சட்டங்களின் ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்ட சட்ட வேலைச் சட்டகத்திற்குள் நிதி அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தொழிற்படுகின்றது. நடுத்தரகால பேரண்டப் பொருளாதார வேலைச் சட்டகத்திற்குள் இணங்கும் வகையில் நடுத்தரகால செலவினத்தினை துறை ரீதியான அடிப்படையில் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதை திணைக்களத்தின் தொழிற்பாடுகள் முக்கியமாகக் கொண்டுள்ளது. நடுத்தரகால வேலைச்சட்டகமானது துறை ரீதியான கொள்கை உபாயங்களின் பின்னணியில் குறிப்பீடு செய்யப்பட்ட இலக்கினை நோக்கி நிதி திட்டங்களை சமர்ப்பிக்கும் அதேவேளை, அரசாங்க செலவின முகாமைத்துவத்தின்பால் கூடிய கவனம் செலுத்துகின்றது. இச்செயன்முறையானது நிரல் அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரசாங்கத்தின் நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய திறைசேரித் திணைக்களங்கள் என்பவற்றுடன் தொடரான உசாவுகையின் பெயரில் மேற்கொள்ளப்படுகின்றது.

இத்திணைக்களத்தின் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் அரசாங்க நிதி முகாமைத்துவ நோக்கெல்லைக்குள் மேற்கொள்ளப்படுவதுடன், 2015 இலிருந்து அரசாங்கத்தின் நிருவாகக் கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களுக்கு வசதியளிப்பதற்காகவும் தேசிய வரவு செலவுத்திட்ட வேலைச் சட்டகத்திற்குள் விசேட கவனத்தினை செலுத்துகின்றது.

## 1.1 தூரநோக்கு

"நிதி வளங்களின் வினைத்திறன் மிக்க ஒதுக்கீட்டினூடாக சமூகப் பொருளாதார அபிவிருத்தி"

## 1.2 பணிக்கூற்று

அரசாங்கத்தின் அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு அரசாங்க பொருட்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட சேவைகளின் வினைத்திறன் மிக்க வழங்களுக்காக பொது நிதி வளங்களின் மதிப்பீடு மற்றும் ஒதுக்கீடு.

## 1.3 இலக்குகள்

- நிதி வளங்களின் பயன்வலு மற்றும் வினைத்திறன் மிக்க ஒதுக்கீட்டின் ஊடாக மக்களின் சமூகப் பொருளாதார அபிவிருத்தியினை உறுதிப்படுத்துதல்.
- அரசிறை ஒழுங்குகளைப் பேணுதல்
- அரசிறை வளர்ச்சியினை உறுதிப்படுத்துதல்
- சிறந்த மதிப்பீட்டுக்கான கற்றல் மற்றும் பகிர்வு

## 1.4 பணிகளும் பொறுப்புக்களும்

### 1.4.1 தேசிய வரவுசெலவுத் திட்டத்தினைத் தயாரித்தல்

அரசாங்கத்தின் முன்னுரிமைகள், பணிப்புரைகள் மற்றும் உபாயங்களினை கவனத்திற் கொண்டு தேசிய வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் சமூகப் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் கலந்துரையாடல் செயன்முறையொன்றின் ஊடாகவும் வினைத்திறன்மிக்க வள ஒதுக்கீட்டினை கவனத்திற் கொண்டும் வடிவமைக்கப்பட்டது. அரசிற்கான வருடாந்த வரவு செலவுத்திட்டமானது அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் நியதிச் சட்டசபைகள் உள்ளடங்களான செலவின முகவராண்மைகளுக்காக தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக அரசாங்கத்தினால் குறிப்பீடு செய்யப்பட்ட அரசிறை இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தொடர்புடைய திறைசேரித் திணைக்களங்கள் மற்றும் செலவின முகவராண்மைகளுடன் கலந்துரையாடப்படுகின்றது. அடுத்த மூன்று வருட காலத்திற்கான நடுத்தர கால வரவு செலவுத்திட்ட வேலைச் சட்டகத்தின் கீழ் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

### 1.4.2 தேசிய வரவுசெலவுத் திட்டத்தினைச் செயற்படுத்தல்

தேசிய வரவு செலவுத்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக பின்வரும் செயற்பாடுகள் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

- அங்கீகாரம் அளித்தல் உள்ளடங்களாக வரவு செலவுத்திட்டச் செயற்படுத்துகை தொடர்பான வழிகாட்டல்களையும் சுற்றுநிருபங்களையும் வெளியிடுதல்.
- அங்கீகரிக்கப்பட்ட வரையறைகள் மற்றும் பராமரிக்கப்படும் அரசிறை ஒழுங்குகளுக்குள் வெளிப்படுத்தப்பட்ட நோக்கங்களுக்காக நிதி பிரத்தியேகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு கட்டுப்பாடுகளை விதித்தல்.
- தொழிற்பாட்டு வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கு செலவின முகவராண்மைகளுடன் கலந்துரையாடுதல்.
- வரவு செலவுத்திட்ட மீளாய்வு செயற்படுத்துகை குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு தெரிவுசெய்யப்பட்ட மூலதனக் கருத்திட்டங்களுக்காக காசு விடுவிப்பதற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு பரிந்துரைகளை வழங்குதல்.
- நிதி மூலங்களை ஒதுக்கீடு செய்தல் தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான அவதானிப்புகளை தயாரித்தல்.
- அரச கணக்குகள் குழு, அரச நிதிக் குழு, அரச தொழில் முயற்சிகள் மீதான குழு மற்றும் பாராளுமன்ற கூட்டங்களில் திறைசேரியினைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்.
- பாராளுமன்ற குழுக்கள், சனாதிபதியின் கூட்டங்கள் மற்றும் பிரதமரின் கூட்டங்களில் திறைசேரியினை பிரதிநிதித்துவப்படுத்தல்.
- ஒதுக்கீட்டு வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கு நிதி ஏற்பாடுகளை மீள் இடம் மாற்றுதல்.
- உரிய அமைச்சுக்களின் மூலம் வரவு செலவுத்திட்ட முன்மொழிவு செயற்படுத்துகை முன்னேற்றத்தினை கண்காணித்தல்.
- நிதிபிரமானக் குறிப்பு 66 இன் கீழ் மாற்றல்களுக்கான அங்கீகாரம் வழங்குதல்.

### 1.4.3 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

வர்த்தக, களஞ்சியங்கள், அரசாங்க அலுவலர் முற்பணக் கணக்குகளுக்கான வரையறைகளை தீர்மானித்தல் மற்றும் செலவின முகவராண்மைகளிலிருந்து வேண்டுகோள்களின் அடிப்படையில் வரையறைகளைத் திருத்துதல்.

### 1.4.4 வரவு செலவுத்திட்ட கண்காணிப்பினைச் செயற்படுத்தல்

- வரவு செலவுத்திட்ட மீளாய்வுச் செயற்படுத்துகை குழுவின் செயலாளராக இருத்தல்.
- வரவு செலவுத்திட்ட கண்காணிப்புத் தொடர்பான வழிகாட்டல்கள் மற்றும் சுற்று நிருபங்களை வெளியிடுதல்.
- திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகள் உள்ளடங்களாக அமைச்சுக்களின் நிதி மற்றும் பௌதிக செயலாற்றுகை, வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை கண்காணித்தல்.

### 1.4.5 நிகழ்ச்சித்திட்டங்கள்/ கருத்திட்டங்களுக்கான நிதி மூலங்களை ஒதுக்கீடுசெய்தல்

- வரவு செலவுத்திட்ட முன்மொழியின் கீழ் கௌரவ நிதி அமைச்சரினால் முன்மொழியப்பட்ட புதிய நிகழ்ச்சித்திட்டங்கள் / கருத்திட்டங்ளுக்குத் தேவையான நிதி மூலங்களை ஒதுக்கீடு செய்தல்.
- சமூக நல செயற்பாடுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளை மீள் ஒதுக்கீடு செய்தல்.
- அனர்த்த நிவாரண சேவைகள் மற்றும் ஏனைய அத்தியவசிய தேவைகளுக்காக நிதி மூலங்களை ஒதுக்கீடு செய்தல்.

**அட்டவணை 1.1 : செயலாற்றுகை சுருக்கம் - 2016**

| தொழிற்பாடு | நடவடிக்கை | பொதுவான இலக்கு | அடைவு |
|---|---|---|---|
| 1. 2016 ஆம் ஆண்டு தேசிய வரவு செலவுத் திட்டத்தையும் செலவின முகாமையையும் செயற்படுத்துதல். | செலவின முகாமைத்துவம் தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கும் வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபத்தினை வெளியிடுதல். | அரசாங்க செலவினத்தினை வினைத்திறன் மிக்கதாக முகாமை செய்தல். | இது தொடர்பாக 7/2015 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபம் வெளியிடப்பட்டது. (2016 வரவு செலவுத்திட்ட செலவினத்திற்கு அங்கீகாரமளித்தல். அரச செலவின முகாமைத்துவம். |
| | எதிர்பாரா செலவினத்திற்கான மேலதிக நிதி ஒதுக்கீடு மற்றும் பாராளுமன்றத்திற்கு குறைநிரப்பு மதிப்பீடுகளை சமர்ப்பித்தல். | நிதி ஏற்பாடு செய்தலும் எதிர்பாரா செலவினங்களை குறைத்தலும் | பாராளுமன்றத்திற்கு குறைநிரப்பு மதிப்பீடு ஒன்றினை சமர்ப்பிக்காது வெள்ளம், வரட்சி போன்ற எதிர்பாராத நிகழ்வுகளுக்கான மேலதிக நிதி ஒதுக்கீட்டுத் தேவை நிவர்த்தி செய்யப் பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட செலவின வரையறைக்குள் நிதி மீள் ஒதுக்கீட்டினை முகாமை செய்தல். |
| | நிதிப்பிரமாணக்குறிப்பு 66 மற்றும் 69 இன் கீழ் நிதி மாற்றல்களுக்கு அங்கீகாரம் வழங்குதல். | அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்குள் செலவினத்தினைப் பேணுதல். | மேற்குறித்த ஒழுங்கு விதிகளுக்கமைவாக 1,563 விண்ணப்பங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதில் 240 விண்ணப்பங்கள் நிகழ்ச்சித்திட்ட மாற்றல்கள் மற்றும் 1,323 விண்ணப்பங்கள் கருத்திட்டமாற்றல்களுக்கானது. |
| | 2015 இன் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தினை திருத்துதல். | 2016 இற்கான ஒதுக்கீட்டுச் சட்டத்திலிருந்து இல்லாதாக்கப்பட்டதனால் ஒவ்வொரு மாகாண சபைக்கும் புதிய செலவினத் தலைப்பு உருவாக்கப்பட்டமை (2015 இன் 16 ஆம் இலக்க) மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2(1) (6) பந்தியினை திருத்துதல். (கடன் பெறுகை வரையறை)<br><br>2016 ஆகஸ்ற் இரண்டாம் வாரத்தில் ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. | 2016.07.15 ஆந் திகதி 2016 இற்கான ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்ட மூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.<br><br>2016.08.09 ஆந் திகதி ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமூலம் அங்கீகரிக்கப்பட்டது. | 2016.10.26 ஆந் திகதி இரண்டாவது வாசிப்பு. 2016.10.26 ஆந் திகதி பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமூலம் அங்கீகரிக்கப்பட்டது. 2016.10.26 ஆந் திகதி சபாநாயகரினால் 2016 இன் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் சான்றுப் படுத்தப்பட்டது. |
| 2. 2017 இற்கான தேசிய வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டினை தயாரித்தல் | வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான வரவு செலவுத்திட்ட வழிகாட்டல்களை வழங்குதல். | வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு வழிகாட்டல்களுடன் வரவு செலவுத்திட்ட அழைப்பினை விநியோகித்தல். | பூச்சிய அடிப்படை வரவு செலவுத்திட்ட தயாரிப்பு திட்டத்தினைப் பயன்படுத்தி 2017-2019 அரசாங்க அபிவிருத்தி கொள்கை வேலைச் சட்டகத்திற்குள் 2017 இற்கான வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டது. |
| | செலவின முகவராண்மைகள் மற்றும் திறைசேரி திணைக்களங்கள் என்பவற்றுடன் கலந்துரையாடி வரைவு வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டினை தயாரித்தல். | அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதனை உறுதிப்படுத்தல் | நிதி அமைச்சரின் தலைமையில் ஏனைய அமைச்சுக்களின் அமைச்சர் களுடனும் அக்கரை செலுத்துநர்களுடன் தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களுக்கு வரவு செலவுத்திட்டத்திற்கு முன்னரான கூட்டங்களை நடாத்துதல். |
| | தொடர்புடைய அமைச்சுக்களுடன் வரவு செலவுத்திட்ட கலந்துரையாடல்கள் இடம் பெற்றன. | உண்மையான தேவைகளை கவனத்திற் கொண்டு யதார்த்த பூர்வமான வரவு செலவுத்திட்டமொன்றினை தயாரித்தல். | தொடர்புடைய திணைக்களங்கள் மற்றும் முகவர்களுடன் திறைசேரியின் செயலாளர் மற்றும் பிரதிச் செயலாளர்களுடன் மீளாய்வுக் கூட்டங்கள் இடம் பெற்றன. |
| | 2017 இற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தினை பாராளுமன்றத்தில் உரிய காலத்தில் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றன. | ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2016 ஒக்டோபர் மூன்றாவது வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டது.<br><br>விபரமான மதிப்பீடுகளின் தயாரிப்பு | 2016.10.05 ஆந் திகதிய வர்த்தமானியில் 2017 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பிரசுரிக்கப்பட்டது.<br><br>2016.10.20 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு ஒதுக்கீட்டுச் சட்டமூலம் சமர்ப் பிக்கப்பட்டது<br><br>2016.11.10 ஆம் திகதி வரவு செலவுத்திட்டம் (இரண்டாவது வாசிப்பு) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>2016.12.10 ஆம் திகதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டது.<br><br>2016.12.10 ஆம் திகதி கௌரவ சபாநாயகரினால் 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டமூலம் சான்றுப்படுத்தப்பட்டது.<br><br>2016.12.19 ஆந் திகதி நிதி அமைச்சரினால் ஆணைப் பத்திரம் வழங்கப்பட்டது.<br><br>அனைத்துத் தொடர்புடைய செலவின தலைப்புகளினதும் பின்னணித் தகவல்களுடன் விபரமான மதிப்பீடுகள் அச்சிடப்பட்டன. |

| | | | |
|---|---|---|---|
| 3. அமைச்சரவை விஞ்ஞாபனம் மீதான அவதானிப்புகளை சமர்ப்பித்தல் | அரசாங்கத்தின், துறை ரீதியான கொள்கை மற்றும் செலவினம் தொடர்பாக அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான சிபாரிசுகளையும் அவதானிப்புகளையும் காலத்திற்கு காலம் சமர்ப்பித்தல். | அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான அவதானிப்புகளை உடனுக்குடன் சமர்ப்பித்தல் | அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் அவதானிப்புகள் 360 சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |
| 4. தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்கள உள்ளக முகாமை | பொது நிர்வாகம்<br><br>நிதிக் குத்தகையின் கீழ் குத்தகை வாகன முகாமைத்துவம் | திணைக்களங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மனித வளங்கள் மற்றும் வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளில் வினைத்திறன் மிக்க பயன்பாட்டினை உறுதிப்படுத்தல் | மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 8,403.60 மில்லியன் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் 2,889.42 மில்லியன் மீண்டெழும் செலவினமாகவும் ரூபா 5,514.18 மில்லியன் மூலதனச் செலவினமாகவும் காணப்பட்டது. அவற்றுல் நிதிக் குத்தகை கொடுப்பனவுகள் ரூபா 5,506.17 ஆகும். |
| | திணைக்களத்தின் முற்பணக் கணக்குக் கட்டுப்பாடு | வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் கடன் மற்றும் முற்பணங்களுக்கான அனைத்து விண்ணப்பங்களும் முற்பணக்கணக்கு வரையறைகளை பேணியதாக காணப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளைப் பின்பற்றி, அனர்த்த கடன், துவிச்சக்கர வண்டிக் கடன், விசேட முற்பணங்கள் மற்றும் பண்டிகை முற்பணங்கள் என்பன ரூபா 6,957,606 ஆகக் காணப்பட்டது. |
| | திறன் விருத்தி | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சியின் மூலம் மனித வள அபிவிருத்தி. | தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்துடன் தொடர்பான வெளிநாட்டுப் பயிற்சிகளில் 17 பேர் கலந்து கொண்ட அதேவேளை 24 அலுவலர்கள் உள்நாட்டுப் பயிற்சி நெறியில் கலந்து கொண்டனர். |
| | அறிக்கைகளை சமர்பித்தல் | பின்வரும் அறிக்கைகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டன<br><br>(அ) செயலாற்றுகை அறிக்கை<br>(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு<br>(இ) அரசாங்க அலுவலர் முற்பணக் கணக்கு மீள் இணக்கம் | பின்வரும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன<br><br>(அ) செயலாற்றுகை அறிக்கை 2014<br>(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு 2016<br>(இ) அரசாங்க அலுவலர் முற்பணக் கணக்கு மீள் இணக்கம் 2016 |
| | கணக்காய்வு வினாக்களுக்கான பதில்கள். | கணக்காய்வு வினாக்களைக் குறைத்தல் அரசாங்க கணக்குகள் குழுவுக்கு சமுகமளித்தல். | கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட அனைத்து வினாக்களுக்கும் (07) பதிலளிக்கப்பட்டது. |

## 2. வரவு செலவுத்திட்டத்தினை மீளாய்வு செய்தல் மற்றும் செயற்படுத்தல் - 2016

### 2.1 2016 இற்கான ஒதுக்கீட்டுச் சட்டம்

2016 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2015 ஒக்டோபர் 23 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இரண்டாவது மற்றும் மூன்றாவது வாசிப்பினைத் தொடர்ந்து 2015 இன் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டமொன்றாக 2015 டிசம்பர் 19 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டது.

ஒதுக்கீட்டுச் சட்டமானது முதலாவது அட்டவணை, இரண்டாவது அட்டவணை மற்றும் மூன்றாவது அட்டவணை ஆகிய மூன்று அட்டவணைகளை கொண்டுள்ளது. ஒவ்வொரு அட்டவணையும் கீழே அட்டவணை 2.1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவினங்களை உள்ளடக்கியிருக்கும்.

**அட்டவணை 2.1.1 : 2016 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டம்**

| | | |
|---|---|---|
| **முதலாவது அட்டவணை** | நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையில் அரசாங்கத்தின் பொதுச் சேவைகளுக்கான செலவினம் | மொத்த மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா.2,507 பில்லியன்<br>(மீண்டெழும்- ரூபா 1,114 பில்லியன் மற்றும் மூலதனம் - ரூபா 1,055 பில்லியன்) |
| **இரண்டாவது அட்டவணை** | சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட திரட்டு நிதியத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய அரசாங்கத்தின் செலவினம் | மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 1,192 பில்லியனாகும்<br>(மீண்டெழும்- ரூபா 544 பில்லியன் மற்றும் மூலதனம் - ரூபா 648 பில்லியன்) |
| **மூன்றாவது அட்டவணை** | முற்பணக் கணக்கு செயற்பாடுகள் தொடர்பான செலவினம் | அரசாங்க வரவு செலவுத் திட்டத்திலிருந்து பங்களிப்பு ரூபா 5 பில்லியன் |

இதற்கமைவாக மேலே குறிப்பிடப்பட்ட மூன்று அட்டவணைகளின் அடிப்படையில் மொத்த அரசாங்க செலவினம் ரூபா 3,704 பில்லியனாகும்.

## 2.2 2015 இன் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கான திருத்தங்கள்

மாகாண சபைகளுக்கு தனியான செலவினத் தலைப்புகளின் கீழ் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளை மேற்கொள்கின்ற தற்பொழுது காணப்படுகின்ற முறைமையானது 2016 இல் நிறுத்தப்பட்டது. 2016 வரவு செலவுத்திட்டத்தினை செயற்படுத்துகின்றபோது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் செலவின தலைப்பிற்குள் அனைத்து மாகாண சபைகளுக்குமான வரவு செலவுத்திட்ட நிதி ஏற்பாடு உள்ளடக்கப்பட்டிருந்தது. இம் முயற்சியானது பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்ற வகையில் இச்செயன்முறையினைத் திருத்தி 2015 வரை பயன்படுத்தப்பட்டு வந்த முறைமையை செயற்படுத்துமாறு மாகாண சபைகள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தன. இக் கோரிக்கையினை ஏற்றுக் கொண்ட அமைச்சரவை 2015 இன் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தினை திருத்துவதன் மூலம் இச்செயன்முறையினைத் திருத்தி ஒவ்வொரு மாகாண சபைகளுக்கும் தனியான செலவின தலைப்புகளை உருவாக்கும் வகையில் திருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதன் அடிப்படையில், 2016.07.15 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் வரைபு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது.

மேலும், அரசாங்கத்தின் நிதிக்கூற்று மீதான கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட கேள்வியினை திருத்தும் வகையில் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2. (1) (ஆ) ஆம் பிரிவினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் இதன்மூலம் கடந்த பல தசாப்தங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டுவந்த கணக்கீட்டு முறைமையும் திருத்தப்பட்டது. இத்திருத்தமானது 2016 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமூலமாக குழுநிலையில் திருத்தப்பட்டது.

மேற்குறித்த மாற்றங்களை சான்றுப்படுத்தும் வகையில் ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமூலமானது, 2016 இன் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமொன்றாக அங்கீகரிக்கப்பட்ட அதேவேளை, மதிப்பிடப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை என்பன எவ்வித மாற்றமுமின்றி காணப்பட்டது.

### 2.3 எதிர்பாரா நிதியத்தின் பயன்பாடு

புதிதாக உருவாக்கப்பட்ட பிராந்திய அபிவிருத்தி அமைச்சுக்காக செலவின தலைப்பொன்று காணப்படாமையினால் தற்காலிக நடவடிக்கையொன்றாக அரசியலமைப்பின் 151(2) ஆம் உறுப்புரையின் நியதிகளுக்கமைவாக எதிர்பாரா செலவின நிதியத்திலிருந்து ரூபா 15 மில்லியன் முற்பணமாக பெறப்பட்டது. இதற்காக நிதிப் பிரமாணக்குறிப்பு 78 இல் குறிப்பீடு செய்யப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கமொன்றுக்காக எதிர்பாரா நிதியத்திலிருந்து பெறப்பட்ட முற்பணங்கள் அடுத்த நிதியாண்டு நிறைவடைவதற்கு முன்னர் குறைநிரப்பு மதிப்பீடொன்றாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்ற அடிப்படையில் அதே அமைச்சினால் சமர்பிக்கப்பட்ட குறைநிரப்பு மதிப்பீட்டில் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன் குறித்த ஒதுக்கீட்டுக்கெதிராக கொடுப்பனவு செலுத்தப்பட்டது.

### 2.4 குறைநிரப்பு மதிப்பீடுகள்

2015 ஏப்பிரல் 6 ஆந் திகதிய 1909/20 மற்றும் 2015 ஏப்பிரல் 10 ஆந் திகதிய 1909/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினால் தாபிக்கப்பட்ட 11 அமைச்சுக்களுக்கு வசதியளிக்கும் வகையில் 2015 இல் எதிர்பாரா நிதியத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 55 மில்லியன் முற்பணத்தினை செலுத்தித் தீர்ப்பதற்கு நிதி அமைச்சர் குறைநிரப்பு மதிப்பீடொன்றினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அதன்பின்னர், விசேட ஆணைப்பத்திர இல.01 நிதி அமைச்சரினால் விநியோகிக்கப்பட்டதுடன் 2015 இல் எதிர்பாரா நிதியத்திலிருந்து பெறப்பட்ட மேற்கூறிய முற்பணத்தினைப் பயன்படுத்தி உரப்பட்ட செலவினங்கள் பற்றிய அறிக்கையும் குறைநிரப்பு மதிப்பீட்டில் குறிப்பீடு செய்யப்பட்டது.

அதேபோன்று, பிராந்திய அபிவிருத்தி அமைச்சானது 1958/72 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் ஒருவரினை நியமிப்பதன் மூலம் 2016.03.18 ஆந் திகதி தாபிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட தயாரிப்பின் காலப்பகுதியில் இவ்வமைச்சு காணப்படவில்லை என்ற வகையில் இவ்வமைச்சுக்கான செலவினத் தலைப்பினை வழங்கும் வகையில் பாராளுமன்றத்தில் குறைநிரப்பு மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டது. நிதிப் பிரமாணக் குறிப்பு 74, 75 மற்றும் 76 நடைமுறைகளைப் பின்பற்றி பிராந்திய அபிவிருத்தி அமைச்சுக்கு ரூபா 592,925,000 மில்லியன் குறைநிரப்பு மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டது. (மீண்டெழும் ரூபா 469,425,000 மற்றும் மூலதனம் ரூபா 123,500,000 மில்லியன்). இது 2016.09.20 ஆந் திகதி பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டபோது, செலவினத் தலைப்பு 147 பிராந்திய அபிவிருத்தி அமைச்சுக்காக உருவாக்கப்பட்டதுடன் நிதி அமைச்சரினால் குறைநிரப்பு ஒதுக்கீட்டுக்கான செலவினத்திற்கான கட்டுநிதியினை விடுவிக்கும் வகையில் விசேட ஆணைப்பத்திரம் 02 விநியோகிக்கப்பட்டது.

### 2.5 எதிர்பாரா செலவு நிதியத்திலிருந்து நிதி விடுவிப்பு

அரசியல் அமைப்பின் 151(2) ஆம் உருப்புரையின் நியதிகளுக்கமைவாக எதிர்பாரா நிதியத்திலிருந்து முற்பணமாக ரூபா 15 மில்லியன் பிராந்திய அபிவிருத்தி அபிவிருத்தி அமைச்சினை புதிதாக உருவாக்குவதற்காக செலவினத் தலைப்பொன்று காணப்படாததினால் இடைக்கால நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்பட்டது. நிதிப்பிரமாணக்குறிப்பு 78 இல் குறிப்பிடப்பட்ட நடபடி முறைகள் பின்பற்றப்பட்டது. குறிப்பிட்ட நோக்கமொன்றுக்காக எதிர்பாரா செலவினத்திலிருந்து முற்பணம் பெறப்பட்டுள்ளது என்ற வகையில் பாராளுமன்றத்தில் குறைநிரப்பு மதிப்பீடொன்றினை சமர்ப்பிப்பதன் மூலம் நிதி ஆண்டு முடிவடைவதற்குள் அதனை செலுத்த வேண்டும். இந்த வகையில் குறித்த தொகையானது உரிய அமைச்சினால் குறைநிரப்பு மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டதன் மூலம் செலுத்தப்பட்டது.

## 2.6 குறைநிரப்பு ஒதுக்கீடு என்ற வகையில் விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள்

குறித்த வருடத்தில் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2 ஆவது அட்டவணையில் விசேட சட்ட சேவைகளில் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கத்திற்காக மேலதிக நிதி தேவைப்படும் சந்தர்ப்பத்தில் திறைசேரிப் படிவம் 77 இற்கு அமைவாக குறைநிரப்பு விசேட சட்ட ஆணைப்பத்திரத்தினை நிதி அமைச்சர் வழங்குதல் வேண்டும். இந்த வகையில் ஒன்பது (9) விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள் அட்டவணை 2.6.1 இல் குறிப்பிடப்பட்டவாறு குறித்த வருடத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.6.1 : 2016 இல் விநியோகிக்கப்பட்ட விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள்**

| அதிகார இல. | செலவினம் | | நோக்கம்/குறிக்கோள் | தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| | தலைப்பு | நிறுவனம் | | |
| 01 | 01 | அதிமேதகு சனாதிபதி | பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட மசோதாவின் அடிப்படையில் முன்நாள் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க திருத்தப்பட்ட ஓய்வூதியத் தெகையினை செலுத்துதல். | 870,000 |
| 02 | 20 | தேர்தல் ஆணையாளர் | தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குதல் | 800,000 |
| 03 | 06 | அரசாங்க சேவை ஆணைக்குழு | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குதல் | 5,670,000 |
| 04 | 253 | ஓய்வூதியத் திணைக்களம் | ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்குவதற்கான ஏற்பாட்டுப் பற்றாக்குறைக்கு நிதியளிப்புச் செய்தல் | 7, 585,000,000 |
| 05 | 08 | தேசிய பொலிஸ் ஆணைக்குழு | பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குதல் | 7,100,000 |
| 06 | 10 | இலஞ்சம் ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலணாய்வு செய்வதற்கான ஆணைக்குழு | இலஞ்சம் மற்றும் ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு கொடுப்பனவு வழங்குதல் | 1,300,000 |
| 07 | 253 | ஓய்வூதியத் திணைக்களம் | ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்குவதற்கான ஏற்பாட்டுப் பற்றாக்குறைக்கு நிதியளிப்புச் செய்தல் | 270,000,000 |
| 08 | 249 | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் | படுகடன் சேவைகள் மீதான ஒதுக்கீட்டுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான நிதி ஏற்பாடு | 179,270,670,000 |
| 09 | 249 | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் | திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் கணக்கீட்டுக் கொள்கையினை மாற்றுவதனால் படுகடன் சேவைகள் மீதான ஏற்பாட்டுப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்தல் | 12,090,339,859.19 |

## 2.6 2016 இல் வரவு செலவுத்திட்ட செயலாற்றுகை

மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 3,699 பில்லியனுக்கு எதிராக 2016 இற்காக மொத்த உண்மையான செலவினமாக ரூபா 3,106 பில்லியன் பதிவாகியுள்ளது. இது 2015 இல் செலவிடப்பட்ட மொத்தச் செலவினத்தினைவிட ரூபா 98 பில்லியன் குறைவாகும். வழங்கப்பட்ட செலவினத்தின் மொத்த பயன்பாட்டு விகிதமானது 84 சதவீதமாகக் காணப்பட்டதுடன் இது 2015 இல் 96 சதவீதமாக பதிவாகியிருந்த செயலாற்றுகையினைவிட 12 சதவீதம் குறைவானதாகும். இவ்வாறு குறைவடைந்ததிற்கான காரணம், 2016.12.31 அன்று செலவின முகவராண்மைகளினால் கையிலுள்ள செலவினமாக ரூபா 82 பில்லியன் காணப்பட்டமையாகும். இத்தொகை செலுத்தப்பட்டிருக்குமாயின் பயன்படுத்தப்பட்ட உண்மையான எதிர்பார்க்கப்பட்ட செலவினம் 86 சதவீதமாக இருந்திருக்கும்.

ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2(1) ஆம் உறுப்புரையின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்ட ஏற்பாடுகளில் (வழங்கல் சேவைகள் மீதான செலவினம்) குறித்த வருடத்தின்போது குறித்த வருடத்தின்போது 69 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அரசாங்கத்தின் மூலதனச் செலவினத்தின் பயன்படுத்துவதானது தெளிவாக வீழ்ச்சியொன்றினை காட்டுவதுடன் ஆரம்ப முதலீட்டுக்கு எதிராக 50 சதவீதத்தினை பதிவாக்கியுள்ளது. சுகாதாரம் மற்றும் கல்வித்துறைகளில் காணி மற்றும் கட்டிடங்கள் பயன்பாட்டு கணக்கான 139 மில்லியன் தேசிய செலவினம் நீங்களாக திருத்தப்பட்ட மதிப்பீட்டுக்கெதிராக 3.3 சதவீதமாக பயன்படுத்தப்படாத மீண்டெழும் செலவினம் காணப்பட்டது.

விசேட சட்டத்தின்கீழ் செலவின மதிப்பீடுகள் (நிதிக் குறியீடு 21) ஆரம்ப மதிப்பீடான ரூபா 1,192 பில்லியனுக்கு எதிரான ரூபா 196 பில்லியன் செலவினத்தினைக் காட்டியது. இது அடிப்படையில் படுகடன் சேவைகளின் அதிகரிப்பு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களுக்கான வட்டிக் கொடுப்பனவு மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் என்பவற்றின் அதிகரிப்பினால் ஏற்பட்டதாகும். திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளுக்கான காசு அடிப்படையிலான கணக்கீட்டினை அறிக்கையிடுகின்ற தற்பொழுது காணப்படும் கொள்கையானது திறைசேரி உண்டியல் மற்றும் முறிகளின் முகத்தோற்றமளவிலான பெறுமதிக்கு திருத்தப்பட்டமை படுகடன் சேவைகளில் இக்குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கு பங்களிப்புச் செய்தது.

நிகழ்ச்சித்திட்டம் 1 – தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் 2 – அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆகிய இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களும் உண்மையான செலவின பதிவின் அடிப்படையில் வீழ்ச்சிப் போக்கினை எடுத்துக்காட்டுகின்றது.

2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 இல் வரவு செலவுத்திட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாட்டு பொழிப்பு அட்டவணை 2.7.1 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.7.1 : வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டுப் பயன்பாடு 2015-2016**

| செலவின வகுதி | ரூபா.மில் | | | |
|---|---|---|---|---|
| | 2015 | | 2016 | |
| | வ.செ.தி | செலவினம் | வ.செ.தி | செலவினம் |
| **ஒதுக்கீட்டுச் சட்டம் (1 ஆம் அட்டவணை)** | **2,101** | **1,849** | **2,507** | **1,719** |
| நிகழ்ச்சித்திட்டம் -1 | 1,085 | 1,102 | 1,021 | 988 |
| நிகழ்ச்சித்திட்டம் -2 | 1,016 | 747 | 1,486 | 731 |
| **விசேட சட்ட சேவை (2 ஆம் அட்டவணை)** | **1,237** | **1,354** | **1,192** | **1,388** |
| **மொத்தம்** | **3,338** | **3,203** | **3,699** | **3,106** |

*மூலம் : அரச கணக்குகள் திணைக்களம்*

2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான அரசாங்க செலவினத்தின் நிதியளிப்பு மூலமானது அட்டவணை 2.7.2 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.7.2 : அரசாங்க செலவினத்தின் நிதி மூலம்**

| நிதிக் குறியீடு | நிதி மூலம் | 2015 ரூபா.பில் | 2016 ரூபா.பில் |
|---|---|---|---|
| 11 | உள்நாட்டு நிதி | 1,545.2 | 1,466.6 |
| 12 | வெளிநாட்டு நிதி | 252.5 | 205.4 |
| 13 | வெளிநாட்டு மானியம் | 5.5 | 6.9 |
| 14 | மீளளிக்கும் வெளிநாட்டுக் கடன் | 1.7 | 2.7 |
| 15 | வெளிநாட்டு மானியம் | 0.1 | 0.2 |
| 16 | மறுதிறத்து நிதி | 0.5 | 0.3 |
| 17 | வெளிநாட்டு நிதி தொடர்பான உள்நாட்டு செலவினம் | 43.0 | 36.3 |
| 21 | விசேட சட்டங்கள் | 1,354.5 | 1,387.6 |
| **மொத்தம்** | | **3,203.0** | **3,106.5** |

*மூலம் : அரச கணக்குகள் திணைக்களம்*

வெளிநாட்டு மானியங்களான பெறப்பட்ட தொகை ரூபா 1.6 பில்லியனாக அதிகரித்தமையானது 2015 இல் பதிவாகிய வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் சாதகமான போக்கொன்றினை காட்டியது. எவ்வாறாயினும், வெளிநாட்டு மானியங்களின் செலவிடல் விகிதமானது மதிப்பிடப்பட்ட தொகைக்கெதிராக 50 சதவீதம் மாத்திரமாகும்.

**அட்டவணை 2.7.3 நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு**

ரூபா மில்.

| அமைச்சின் / செலவின விடயத்தின் பெயர் | மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள் | தி.நா. செலவு விடயத்திலிருந்து மேலதிக ஒதுக்கீட்டுக்காக ஏற்பாடு செய்தல் | மொத்த ஏற்பாடுகள் (கூட்டு தொகை (1)+(2)) | மொத்த ஏற்பாடுகள் (கூட்டு தொகை (1)+(2)+(3)) | மெய் செலவினம் | பயன்படுத்தப்படாத ஏற்பாடு (4)-(5) |
|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| விசேட செலவின அலகு | 11,278 | 6,323 | 16 | 17,616 | 12,923 | 4,693 |
| புத்த சாசன | 1,338 | 829 | - | 2,166 | 2,018 | 148 |
| நிதி | 33,899 | 27,889 | 55 | 61,842 | 57,850 | 3,992 |
| பாதுகாப்பு | 306,658 | 4,413 | - | 311,071 | 270,532 | 40,539 |
| தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் | 12,922 | 24,417 | - | 37,340 | 26,628 | 10,712 |
| அனர்த்த முகாமைத்துவம் | 2,934 | 2,796 | - | 5,730 | 4,446 | 1,284 |
| தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் | 12,587 | 582 | - | 13,169 | 12,927 | 241 |
| நீதி | 9,885 | 704 | - | 10,588 | 9,513 | 1,075 |
| சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச வைத்தியம் | 174,078 | 5,554 | - | 179,632 | 136,632 | 43,000 |
| வெளிநாட்டலுவல்கள் | 9,469 | 500 | - | 9,969 | 9,361 | 608 |
| போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை | 59,531 | 29,207 | - | 88,738 | 67,392 | 21,346 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கல் | 173,064 | 57,961 | - | 231,025 | 195,600 | 35,425 |
| விவசாயம் | 54,201 | 5,193 | - | 59,394 | 47,886 | 11,508 |
| மின்வலு புதுப்பித்தல் சக்தி | 1,237 | 12,430 | - | 13,667 | 13,020 | 647 |
| மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் | 9,766 | 445 | - | 10,211 | 7,773 | 2,438 |
| உள்நாட்டலுவல்கள் | 32,638 | 17,625 | - | 50,263 | 38,437 | 11,825 |
| பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக | 5,454 | 190 | - | 5,645 | 3,557 | 2,087 |
| வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை | 2,823 | 5,475 | - | 8,298 | 8,206 | 92 |
| சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி | 68,401 | 2,400 | - | 70,801 | 66,752 | 4,048 |
| கல்வி | 185,976 | 17,396 | - | 203,372 | 65,000 | 138,372 |
| பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் | 194,256 | 73 | 7,855 | 202,184 | 200,608 | 1,576 |
| பெருந்தோட்டக் கைத்தொழில் | 7,879 | 3,063 | - | 10,941 | 8,540 | 2,401 |
| விளையாட்டு | 3,321 | 1,126 | - | 4,447 | 3,230 | 1,218 |
| மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு, சமுதாய அபிவிருத்தி | 687 | 1,110 | - | 1,797 | 1,284 | 513 |
| சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய அலுவல்கள் | 12,598 | 14,389 | - | 26,988 | 22,008 | 4,980 |
| பிராந்திய அபிவிருத்தி | - | 42 | 593 | 634 | 541 | 94 |
| கைத்தொழில் மற்றும் வானிப | 5,675 | 4,827 | - | 10,502 | 9,151 | 1,351 |
| பெற்றோலிய வளங்கல் அபிவிருத்தி | 282 | 161 | - | 443 | 406 | 37 |
| மீன்பிடி மற்றும் நீரியியல் வளங்கள் அபிவிருத்தி | 4,933 | 1,565 | - | 6,498 | 5,670 | 828 |
| காணி | 7,801 | 548 | - | 8,349 | 7,059 | 1,290 |
| கிராமிய பொருளாதார அலுவல்கள் | 4,800 | 6,643 | - | 11,443 | 9,312 | 2,132 |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி | 237,935 | 5,956 | - | 243,891 | 221,089 | 22,802 |
| தேசிய நல்லிணக்க, தேசிய கலந்துரையாடல், அரச கரும மொழிகள் | 791 | 27 | - | 818 | 588 | 230 |
| பொது தொழில் முயற்சி அபிவிருத்தி | 361 | 775 | - | 1,136 | 1,088 | 48 |
| சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்த்தவ சமய அலுவல்கள் | 163 | 756 | - | 919 | 548 | 371 |
| மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் | 69,496 | 281 | - | 69,776 | 45,780 | 23,996 |
| நிலையான அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் | 3,146 | 842 | - | 3,989 | 3,488 | 501 |
| மாநகர மற்றும் மேற்குப் பிராந்திய அபிவிருத்தி | 22,275 | 8,177 | - | 30,452 | 13,336 | 17,116 |
| உள்நாட்டலுவல்கள், வயம்ப அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் | 6,151 | 3,067 | - | 9,218 | 6,642 | 2,576 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க | 100 | 297 | - | 397 | 337 | 60 |
| நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் | 31,978 | 2,972 | - | 34,950 | 26,761 | 8,190 |
| விசேட ஒப்படைகள் | 150 | 43 | - | 193 | 72 | 121 |
| துறைமுகங்கள் மற்றும் விமானத்துறை | 691 | 1,255 | - | 1,945 | 1,232 | 713 |
| வெளிநாட்டு வேலைவாய்ப்பு | 1,037 | 107 | - | 1,144 | 1,069 | 75 |
| சட்டம் மற்றும் ஒழுங்கு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு | 68,221 | 4,822 | - | 73,043 | 66,901 | 6,142 |
| தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் | 7,076 | 135 | - | 7,210 | 5,570 | 1,641 |
| தொலைத் தொடர்பு மற்றும் டிஜிற்றல் உட்கட்டமைப்பு | 427 | 1,150 | - | 1,577 | 996 | 581 |
| உபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தகம் | 815 | 290 | - | 1,105 | 774 | 330 |
| விஞ்ஞானம், தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி | 3,869 | 210 | - | 4,078 | 3,294 | 784 |
| திறன் விருத்தி மற்றும் வாழ்க்கை தொழில் பயிற்சி | 12,017 | 1,432 | - | 13,449 | 10,071 | 3,378 |
| நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கல் முகாமைத்துவம் | 28,078 | 2,209 | - | 30,287 | 18,816 | 11,471 |
| ஆரம்பக் கைத்தொழில்கள் | 1,294 | 200 | - | 1,494 | 1,285 | 209 |
| **படுகடன் சேவைக் கொடுப்பனவு** | 1,169,273 | - | 191,361 | **1,360,634** | **1,352,443** | **8,191** |
| **திறைசேரி நானாவித தலைப்பு** | 623,286 | (290,876) | - | **332,410** | - | **332,410** |
| **முழு மொத்தம்** | **3,699,000** | - | **199,880** | **3,898,880** | **3,106,443** | **792,437** |

*மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம், அரச கணக்குகள் திணைக்களம்*

### 2.8 2016 – 2019 நடுத்தரகால செலவின வேலைச்சட்டகத்தில் 2016 வரவு செலவுத்திட்ட துறை ரீதியான முன்நோக்கு

2016 வரவு செலவுத்திட்டமானது அரசாங்கத்தின் அபிவிருத்தி உபாய வேலைச் சட்டகத்தினை பிரதானமாக அடிப்படையாகக் கொண்டுள்ளது. பின்வரும் தொழிற்பாட்டு செயற்பாடுகள் 2016 வரவு செலவுத்திட்ட உருவாக்கல் மற்றும் செயற்படுத்துகையில் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

(அ) துறை அடிப்படை – 2016 இற்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு ஒவ்வொரு துறையினதும் அபிவிருத்திக்காக தொடர்புடைய அக்கறை செலுத்துநர்களினால் உருவாக்கப்பட்ட துறைரீதியான கொள்கை வேலைச் சட்டகத்திற்குள் அமைந்திருந்தது.

(ஆ) யதார்த்த மதிப்பீடு – 2016 வரவு செலவுத்திட்டமானது அரசியல் அமைப்பின் 150 (2) மற்றும் 150 (3) ஆம் உறுப்புரைகளின் நியதிகளுக்கு அமைவாக வழங்கப்பட்ட வரையறைகளின் கீழ் உண்மையான செலவின மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

(இ) செயலாற்றுகையல்லா கருத்திட்டம் – அத்தகைய கருத்திட்டங்கள் அனைத்தினதும் மீள் உருவாக்கம் மற்றும் இல்லாதொழித்தல் என்பன சில வருடங்களாக மதிப்பிடப்பட்ட அடிப்படையில் இடம் பெற்றுள்ளது.

(ஈ) பிரதிபன்னல் மற்றும் மேலதிக வேலைகளை தவிர்த்தல் - ஒவ்வொரு அமைச்சுக்களுக்கும் இடையில் ஒன்றிலொன்று தங்கியிருத்தல் அல்லது இரட்டைப் பணிகளை புரிவதில் முறையான அங்கீகாரத்தினை வழங்குதல். செலவின முகவராண்மைகள் மற்றும் மாகாண சபைகள் கருத்திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் செயற்படுத்தப்பட்ட ஒரே மாதிரியான செயற்பாடுகளுக்கிடையில் முறையாக பகிர்வு இடம் பெறுவதற்கான துறைரீதியான ஒதுக்கீடுகளை உறுதிப்படுத்தும் வகையில் வழிகாட்டப்பட்டுள்ளன.

## 2.9 வரவு செலவுத்திட்டம் - 2016 முகாமைசெய்தல்

### 2.9.1 நிதி மாற்றல்கள்

திருத்தப்பட்டவாறான 2014 இன் 41 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவுக்கமைவாக, நிதிப்பிரமாணக்குறிப்பு 65 மற்றும் 66 இல் குறிப்பீடு செய்யப்பட்ட நடபடி முறைகள் மற்றும் வரையறைகளைப் பின்பற்றி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மொத்தச் செலவின வரையறைக்குள் பயன்படுத்தப்படாத ஏற்பாடுகளின் மாற்றல் அல்லது மீள் ஒதுக்கீட்டுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது. இச்செயன்முறையின் மீண்டெழும் செலவினத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாது அல்லது பயன்படுத்தப்படமாட்டாது என காணப்படுபவை அதேநிகழ்ச்சித்திட்டத்திற்குள் மீண்டெழும் அல்லது மூலதனச் செலவினத்திற்கு மாற்றுவதற்கான அனுமதி வழங்கப்பட்டதுடன் அல்லது அதே செலவினத் தலைப்புக்குள் வேறேதேனும் நிகழ்ச்சித்திட்டத்தின் மீண்டெழும் அல்லது மூலதன செலவினத்திற்கும் மாற்ற முடியும் அதேபோன்று பயன்படுத்தப்படாத அல்லது பயன்படமாட்டாதென்ற மூலதனச் செலவினங்கள் அதே நிகழ்ச்சித்திட்டத்தின் மூலதன செலவினத்திற்கு மாற்றுவதற்கும் அனுமதிக்கப்பட்டது.

### 2.9.2 குறைநிரப்பு ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள்

செலவினத் தலைப்பு 240, தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின்கீழ் குறைநிரப்பு ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள் கருத்திட்டம் வலமைபோன்று 2016 ஆம் ஆண்டிலும் செலவின முகவராண்மைகளின் எதிர்பாராத அவசர மேலதிக நிதி தேவைப்பாடுகளுக்கு வசதியளிப்பதற்காக செயற்படுத்தப்பட்டது.

இக்கருத்திட்டத்தின் மொத்த நிதி ஏற்பாடானது ரூபா 623.3 பில்லியனாக காணப்பட்டதுடன் 2016 இற்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்துவதற்கான நிதி ஏற்பாடுகள் உள்ளடங்களாக தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட தேவை மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 246.8 பில்லியன் செலவின முகவராண்மைகளுக்கு குறைநிரப்பு ஒதுக்கீடுகளாக வழங்கப்பட்டது. 2016 இற்கான அச்சிடப்பட்ட மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்ட விசேட வழிகாட்டலுக்கமைவாக அனைத்து குறைநிரப்பு ஒதுக்கீடுகளும் வழங்கப்பட்டுள்ளன. ஒதுக்கீடுகளின் பொழிப்பு அட்டவணை 2.9.2.1 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.9.2.1 : ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6 ஆம் உறுப்புரையின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பொழிப்பு**

| | அச்சிடப்பட்ட மதிப்பீடுகளின்படியான நோக்கம் | தொகை (ரூபா மில்) |
|---|---|---|
| 1 | வரவு செலவுத்திட்ட உரையில் முன்மொழியப்பட்ட சம்பள அதிகரிப்பு, சம்பள முரண்பாடுகளுக்கான திருத்தம், புதிய ஆட்சேர்ப்புகள் மற்றும் ஏனைய தொடர்புடைய கொடுப்பனவுகள், அரசாங்கத்துறை ஓய்வூதிய அதிகரிப்பு என்பவற்றுக்கான நிதி ஏற்பாடு. | 7,317 |
| 2 | வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் அடிப்படையாகக் கொண்ட எடுகோள்களின் கீழ் மாற்றங்களிலிருந்து பெறப்பட்ட மேலதிக செலவினம் மற்றும் பொறுப்புக்களை ஈடு செய்வதற்கான ஏற்பாடுகள். | 36,715 |
| 4 | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை செயற்படுத்துவதற்கான நிதி ஏற்பாடுகள். | 110,537 |
| 5 | வரிகள் மற்றும் தீர்வைக் கொடுப்பனவுகள் உள்ளடங்களாக வெளிநாட்டு நிதியளிப்பு மற்றும் தொடர்புடைய மறுதிறத்து நிதியளிப்பு தேவைப்பாடுகளின் ஊடாக நிதியளிக்கப்பட்ட மூலதன செலவின அபிவிருத்திக் கருத்திட்டங்களில் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள். | 92,303 |
| | **மொத்தம்** | **246,872** |

*மூலம் : வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் உறுப்புரையின் நியதிகளுக்கமைவாக மாற்றப்பட்ட நிதி மற்றும் அத்தகைய மாற்றத்திற்கான காரணங்கள் என்பவற்றை உள்ளடக்கிய அறிக்கையொன்று அத்தகைய மாற்றல் இடம்பெற்ற திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக இந்நிதி ஏற்பாடுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட அனைத்து மாற்றல்களும் 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்திற்கமைவாக 2016 இற்கான அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகை அறிக்கையிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அடுத்த வருடத்திற்கான அச்சிடப்பட்ட மதிப்பீடுகளில் உரிய செலவினத் தலைப்புகளின் கீழ் உண்மையான பயன்பாடு அறிக்கையிடப்பட்டுள்ளது.

### 2.9.3 வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபங்களை வெளியிடுதல்

2016 நிதியாண்டின் போது, வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு, வாகனங்கள் கொள்வனவு மற்றும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் போன்ற விடயங்களுக்காக நான்கு சுற்றுநிருபங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.9.3.1 : வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபங்களை வெளியிடுதல்**

| | திகதி | சுற்றுநிருப இல. | தலைப்பு |
|---|---|---|---|
| 1 | 17.03.2016 | NBD 01/2016 | தொழிற்பாட்டுக் குத்தகை முறைமையின் கீழ் அரசாங்க நிறுவனங்களுக்கான வாகனங்கள் கொள்வனவிற்கான வழிகாட்டல்கள். |
| 2 | 19.09.2016 | NBD 01/2016 (i) | தொழிற்பாட்டுக் குத்தகை முறைமையின் கீழ் அரசாங்க நிறுவனங்களுக்கான வாகனங்கள் கொள்வனவிற்கான வழிகாட்டல்கள். (2016.03.17 ஆம் திகதிய தேனு 01/2016 சுற்றுநிருபத்தினை திருத்துதல்) |
| 3 | 02.08.2016 | NBD 02/2016 | 2017 வரவு செலவுத்திட்ட அழைப்பு – 2017 இற்கான வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதற்கான வழிகாட்டல்கள் மற்றும் பணிப்புரைகள். |

| | | | |
|---|---|---|---|
| 4 | 30.12.2016 | NBD 03/2016 | அனர்த்த அவசர நிலைமைகளில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அனர்த்தத்தினால் சேதமடைந்த பிரதேசங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்கள் மற்றும் அனர்த்தத்திற்குள்ளான வீடுகளிலிருந்து மீட்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் வழங்கல் வழிகாட்டல்கள். |
| 5 | 30.12.2016 | NBD 04/2016 | அனர்த்த அவசர நிலைமைகளின் போது மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட நிலையில் இறந்த மீனவர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கான வழிகாட்டல். |
| 6 | 28/12/2016 | NBD 05/2016 | செலவினத்திற்கான அங்கீகாரமளித்தல் மற்றும் அரசாங்க செலவின முகாமைத்துவம் - 2017 வரவு செலவுத்திட்டம் |

*மூலம் : வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## 3. 2017 ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்

2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியினை துரிதப்படுத்தும் அரசாங்கத்தின் கொள்கை நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு 2016 – 2019 இற்கான நடுத்தரகால வரவு செலவுத்திட்ட வேலைச் சட்டகம் ஒன்றினை உருவாக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கமைவாக, 2017 வரவு செலவுத்திட்டம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியினை 8 சதவீதத்திற்கு மேலாக வளர்ச்சியடையச் செய்யும் வகையில் நடுத்தர காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 - 7 சதவீதமாக அதிகரிக்கும் வகையில் அரசாங்க முதலீடு அதிகரிக்கப்படுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### 3.1 வரவு செலவுத்திட்ட தயாரிப்புக்கான வழிகாட்டல்கள்

வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதற்கான வழிகாட்டல்கள் மற்றும் பணிப்புரைகள் உள்ளடங்களாக 2017 இற்கான வரவு செலவுத்திட்ட அழைப்பானது 02/2016 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபமொன்றாக வெளியிடப்பட்டது. இதற்கமைவாக, அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை வேலைச் சட்டகத்துடன் இணைந்து 2017 வரவு செலவுத்திட்டத்தினை உருவாக்குவதற்கான பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. 2017 வரவு செலவுத்திட்டமானது கிராமிய பிரதேசங்களில் தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல், ஏற்றுமதி வருமானத்தினை அதிகரித்தல், ஊழிய திறனை மேம்படுத்தல், அபிவிருத்தி நடவடிக்கைகளை தனியார் துறை பங்களிப்பினை அதிகரித்தல் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை விரிவாக்குதல் என்பவற்றினை பிரதானமாக உள்ளடக்கியிருந்தது.

மேலும், 2017 வரவு செலவுத்திட்டமானது 2020 அளவில் நாட்டின் வரவு செலவுத்திட்ட முறைமையினை மாற்றுகின்ற நோக்கத்துடன் செயலாற்றுகை அடிப்படை வரவு செலவுத்திட்ட நோக்கத்தினை நோக்கி நகர்கின்ற அதேவேளை பூச்சிய அடிப்படையிலான வரவு செலவுத்திட்ட முறைமையினைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது.

## 4. விசேட செயற்பாடுகள்

### 4.1 அரசாங்க தொழில் முயற்சிகளின் வரவு செலவுத்திட்ட முகாமை

2016 ஆம் ஆண்டின் போது திரட்டிய நிதியத்திலிருந்து நிதி ஒத்துழைப்பு வழங்கப்படுகின்ற 117 தொழில் முயற்சிகளின் (நியதிச் சட்டசபைகள், அதிகார சபைகள், ஆணைக்குழுக்கள்) பொது நிதி மற்றும் வரவு செலவுத்திட்ட முகாமை தொடர்பான அனைத்து விடையங்களும் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன. இந் நிறுவனங்கள் தொடர்பான பின்வரும் பணிகள் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினால் அவற்றினது நிதி மற்றும் முகாமைத்துவத் திறமையினை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டது.

- வருடாந்த வரவு செலவுத்திட்டம், வருடாந்த செயற்பாட்டுத் திட்டம், வருடாந்த கணக்குகள் மற்றும் ஆண்டறிக்கை என்பவற்றினை பரிசீலனை செய்து பகுப்பாய்வு செய்வதன் மூலம் இந் நியதிச்சட்ட சபைகளின் செயலாற்றுகை மற்றும் முன்னேற்ற அறிக்கைகளை மீளாய்வு செய்தல்
- திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்துடன் இணைந்து மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்கள் மீதான மாதாந்த காசுக் கட்டுநிதியினை விடுவிப்பதற்கான வேண்டுகோள்களை பரிசீலனை செய்தல்.
- 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ருபா 500,000/- இனை விஞ்சிய மூலதன செலவினத்திற்கான தேவையான அங்கீகாரத்தினை வழங்குதல்.
- நியதிச் சட்ட சபைகளின் நிதிச் செயலாற்றுகை மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக அறிக்கைகளை சமர்ப்பிப்பதனுடன் பாராளுமன்றத்தினால் கூட்டப்படுகின்ற பொது தொழில் முயற்சிகளுக்கான குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- அத் தொழில் முயற்சிகளினால் வேண்டப்படும் புதிய வாகனங்களை கொள்வனவு செய்வதற்கான அங்கீகாரத்தினை வழங்குவதுடன் தேவையான போது நிதிக் குத்தகை திட்டத்தின் கீழ் புதிய வாகனங்களை கொள்வனவு செய்து கையளித்தல்.
- கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பரிசோதணை அறிக்கை மற்றும் இத்திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட விசேட கணக்காய்வு வினாக்களினை மீளாய்வு செய்தல். இவ் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு தொடர்புடைய நியதிச் சட்டசபைகளுடன் ஒருங்கிணைத்தல் மற்றும் அத்தகைய கணக்காய்வு வினாக்கள் எதிர்காலத்தில் ஏற்படுவதனை தடுப்பதற்கு மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதனை உறுதிப்படுத்தல்.
- நியதிச்சட்ட சபைகளுக்கு புதிய அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சிபாரிசுகளை சமர்ப்பித்தல் மற்றும் அத்தகைய நிறுவனங்களின் உண்மையான தேவை மற்றும் வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளின் கிடைப்பனவு என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு சிபாரிசுகளை வழங்குதல்.
- பல்வேறு நோக்கங்களுக்காக வெளிநாட்டுப் பயணங்களுக்கு தேவையான தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் அங்கீகாரத்தினை வழங்குதல். (பயிற்சி நெறிகள், கூட்டங்கள், கலந்துரையாடல்கள், மாநாடுகள் போன்றன)
- பாரிய மூலதன கருத்திட்டங்களை செயற்படுத்தல் போன்ற நிதி மற்றும் முகாமைத்துவ நிலையங்கள் மீதான நியதிச் சட்ட சபைகளுக்கு ஆலோசனை வழங்குதலும் அவற்றினை ஒருங்கிணைத்தலும்.

## 4.2 அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பான அவதானிப்புக்கள்

2016 ஆம் ஆண்டின் போது கௌரவ நிதி திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்புகளாக 360 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டது.

## 4.3 வாகனங்கள் கொள்வனவுக்கான அங்கீகாரம்

### 4.3.1 வாகனங்கள் கொள்வனவுக்கான தேசிய வரவு செலவுத்திட்ட அங்கீகாரம்

அரசாங்க நிறுவனங்களின் வாகனங்கள் கொள்வனவுக்கான அங்கீகாரத்தினை 1990.01.31 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு அகமைவாக, தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் வழங்கியுள்ளது. இதற்கமைவாக, அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்ளுராட்சி மன்றங்கள் மற்றும் அனைத்து நியதிச்சட்ட சபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்க உடமைக் கம்பனிகள் என்பவற்றினால் சுயநிதியின் மூலம் அல்லது வேறு ஏற்பாடுகளின் மூலம் வாகனங்கள் கொள்வனவுக்காக அத்தகைய ஏதேனும் கொள்வனவுக்கான குழுவின் முன் அங்கீகாரம்

பெறப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. பல்வேறுபட்ட அரசாங்க முகவராண்மைகளினால் வாகனங்கள் கொள்வனவுக்கான வேண்டுகோள்களை தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் தொடர்ந்து மீளாய்வு செய்வதுடன் அங்கீகாரம் வழங்கியுள்ளது. 2016 ஆம் ஆண்டின்போது இத்திணைக்களமானது 463 வாகனங்கள் கொள்வவுக்கான அங்கீகாரத்தினை வழங்கியுள்ளது. கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை அதன் வகைக்கேற்ப அட்டவணை 4.3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.3.1 : வாகன வகைக்கேற்ப வரவு செலவுத் திட்ட திணைக்கள அங்கீகாரம் வழங்கப்பட்ட வாகனங்கள் - 2016**

| வாகனத்தின் வகை | அங்கீகரிக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| வான்கள் | 18 |
| சிங்கிள் / டபிள்/குரூவ்கப் | 69 |
| முச்சக்கர வண்டி | 44 |
| லொறிகள் / ட்ரக்குகள் | 13 |
| மோட்டார் சைக்கிள்கள் | 54 |
| ஏனையவை (ட்ரக்டர்/ட்ரெயிலர்/நீர் பவுசர்கள்,போன்றன...) | 265 |
| **மொத்தம்** | **463** |

*மூலம் : வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

### 4.3.2 அரசாங்க துறைக்கான வாகனங்கள் கொள்வனவு

2016 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக அரசாங்கத் துறைக்கான வாகனங்கள் கொள்வனவானது நிதிக் குத்தகை முறைமையிலிருந்து தொழிற்பாட்டுக் குத்தகை முறைமைக்கு மாற்றப்பட்டது. இம்முறைமையினை மாற்றுவதற்கான நோக்கம் முன்னைய முறைமையினைவிட அரசாங்கத்தின் செலவினத்தினை குறைக்கும் வகையில் இத்திட்டத்தினை செயற்படுத்துவதாகும். இதற்கமைவாக அனைத்து அரசாங்க நிறுவனங்களும் தொழிற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு 01/2016 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபத்தின் வழிகாட்டல்களைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டன. மேற்குறித்த வழிகாட்டல்களில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைவாக 2016 இல் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களமானது 160 மோட்டார் கார்கள், 5 ஜீப்புகள் 328 டபிள்கப்ஸ் வாகனங்கள் மற்றும் 51 வான்கள் கொள்வனவுக்கு அங்கீகாரம் வழங்கியது.

2016 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக வெளிக்கள அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கான ஒதுக்கீடுகள் நிறுத்தப்பட்டன. அறிவுருத்தல்களுக்கமைவாக, 2016 ஆம் ஆண்டின் போது 359 மோட்டார்சைக்கிள்கள் / ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டன.

### 4.4 சபைகளிலும் குழுக்களிலும் பதவியணியினர் பங்குபற்றுதல்கள்

இத்திணைக்களத்தின் பெரும்பாலான பதவிநிலை அலுவலர்கள் நியதிச் சட்டசபைகள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்க உடைமை கம்பனிகளின் (GOCs) பணிப்பாளர் சபையின் பணிப்பாளர்களாக (திறைசேரி பிரதிநிதிகளாக) பணியாற்றியுள்ளனர். அத்துடன் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கேள்விப்பத்திரச் சபைகள் (CATBs) மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் (TECs) உறுப்பினர்களாக திறைசேரி செயலாளர் சார்பாக நியமனம் பெற்றனர். அதற்கு மேலதிகமாக இந்தத்திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள் பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள் குழு (COPA) மற்றும் அரசாங்க தொழில் முயற்சிகள் குழு (COPE) என்பவற்றில் திணைக்களத்தினை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் பங்குபற்றினர்.

## 5. தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் நிறுவன கட்டமைப்பு

தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு மற்றும் அதன் வகிபாகம் நிரல் அமைச்சுக்களின் செலவின மதிப்பீடுகளின் ஏற்பாடுகளை பிரதிநிதித்துப் படுத்தும் பின்வரும் துறைகளின் கீழ் வகுப்பாக்கமொன்று செய்யப்பட்டுள்ளது.

1. அரசாங்க சேவை
2. தேசிய பாதுகாப்பு மற்றும் சட்ட அமுல்படுத்துகை
3. மனித வளங்கள்
4. உட்கட்டமைப்பு
5. நிதி
6. சமூகப் பாதுகாப்பு
7. சுற்றாடல்
8. மெய்ப் பொருளாதாரம்

### 5.1 பதவியணி

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 06/2006 ஆம் இலக்க சுற்று நிறுபத்துக்கு அமைவாக 2016 இல் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்புக்குள் பின்வரும் சேவை மட்டங்களின் கீழ் அலுவலர்கள் கடமையாற்றியுள்ளனர்.

| சேவை மட்டம் | அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 39 |
| மூன்றாம் நிலை மட்டம் | 04 |
| இரண்டாம் நிலை மட்டம் | 75 |
| ஆரம்ப மட்டம் | 37 |

2016 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் தற்பொழுது காணப்படும் பதவியணியும் அட்டவணை 5.1.1 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.1.1 : 2016 ஆம் ஆண்டிற்கான பதவியணி**

| பதவி | Nrit | தரம்/ வகுப்பு | சம்பளத் திட்டம் | அங்கீகரிக் கப்பட்ட பதவியணி நிரந்தர | சேவை பதவியணி நிரந்தர | பதவி வெற்றிடம் |
|---|---|---|---|---|---|---|
| **சிரேட்ட மட்டம்** | | | | | | |
| பணிப்பாளர் நாயகம் | SLAS | விசேட | SL-3 | 1 | 1 | 0 |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | SLAS | விசேட | SL-3 | 2 | 2 | 0 |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | SLPS | விசேட | SL-3 | 1 | 1 | 0 |
| பணிப்பாளர் | SLAS | I | SL-1 | 8 | 7 | 1 |
| பணிப்பாளர் | SLPS | I | SL-1 | 5 | 4 | 1 |
| பணிப்பாளர் | SLAcc.S | I | SL-1 | 1 | 1 | 0 |
| பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | SLAS | II/III | SL-1 | 15 | 12 | 03 |
| பிரதிப் பணிப்பாளர் | SLAcc.S | II | SL-1 | 1 | 1 | 0 |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் | SLPS | II / III | SL-1 | 4 | 4 | 0 |
| கணக்காகாளர் | SLAcc.S | III | SL-1 | 1 | 1 | 0 |
| **மொத்தம்** | | | | **39** | **34** | **05** |
| **மூன்றாவது மட்டம்** | | | | | | |
| நிருவாக அலுவலர் | PMAS | அதிவிசேட | MN-7 | 1 | 1 | 0 |
| மொழிபெயர்ப்பாளர் | TS | | | 2 | 2 | 0 |
| தகவல் தொழிநுட்ப அலுவர் | IT | | | 1 | 1 | 0 |
| **மொத்தம்** | | | | **4** | **4** | **0** |
| **இரண்டாவது மட்டம்** | | | | | | |
| முகாமைத்துவ உதவியாளர் | PMAS | I/II/III | MN-2 | 23 | 23 | 0 |
| வரவுசெலவுத் திட்ட உதவியாளர் | | | MN-4 | 1 | 1 | 0 |
| அபிவிருத்தி உதவியாளர் | DO s | | MN-4 | 51 | 39 | 12 |
| **மொத்தம்** | | | | **75** | **63** | **12** |
| **ஆரம்ப மட்டம்** | | | | | | |
| சாரதி | DS | I/II"A"/ II"B" | PL-3 | 18 | 17 | 1 |
| அலுவலக உதவியாளர் | O.E.S | I/II/III | PL-1 | 19 | 18 | 1 |
| | | | | **37** | **35** | **02** |
| **உப மொத்தம்** | | | | **155** | **136** | **19** |

### 5.2 மனித வள அபிவிருத்தி

இத் திணைக்களமானது அதன் பதவியணியினர் தமது அலுவலக ஆற்றல்களில் பல்வேறு கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு மேலதிகமாக, அவர்களின் உயர்தொழில் திறமைகள் மற்றும் செயற்றிறன் என்பவற்றினை அதிகரிக்கும் பொருட்டு 2016 ஆம் ஆண்டில் பின்வரும் உள்நாட்டு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக அனுப்ப முடியுமாக இருந்தது.

### 5.2.1 வெளிநாட்டு பயிற்சி/கருத்தரங்குகள்/கூட்டங்கள்

2016 ஆம் ஆண்டின்போது பின்வரும் பதவியணி உறுப்பினர்கள் பல்வேறுபட்ட துறைகளில் வெளிநாட்டு பயிற்சிகளைப் பெற்றனர்.

| இல | அலுவலரின் பெயர் | பதவி | நிகழ்ச்சித்திட்டம் | நாடு | காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | திருமதி கே.ஜி.கே. விமலவீர | மேலதிக பணிப்பாளர் நாயகம் | கொள்கை கலந்துரையாடல் - மத்திய மற்றும் உள்ளூராட்சி மன்ற உறவுகள் மற்றும் அரசிறை நிலையான தன்மை | யப்பான் | 21.04.2016-23.04.2016 |
| | | | படுகடன் முகாமைத்துவ மாநாடு | வொசிங்டன் | 19.10.2016 - 20.10.2016 |
| 2 | திரு எச்.பி.ஜயானந்த | மேலதிக பணிப்பாளர் நாயகம் | வரவு செலவுத்திட்ட நிறுவனங்களை உறுதிப்படுத்தல் கருத்தரங்கு | சிங்கப்பூர் | 25.07.2016 - 29.07.2016 |
| 3 | திருமதி டி.எஸ்.ஏ.எம். கொஸ்தா | பணிப்பாளர் | நிலையான அபிவிருத்தி மீதான ஆசிய பசுபிக் மாநாடு | தாய்லாந்து | 03.04.2016-05.04.2016 |
| 4 | திருமதி வை.பி. சுமனா | பணிப்பாளர் | சுகாதார நிதியளிப்புக் கொள்கை | மனிலா | 11.07.2016 - 15.07.2016 |
| 5 | திரு. சி.ஜயசூரிய | பணிப்பாளர் | ஆபத்து உணர்திறன் முதலீட்டுத் திட்டமிடல் | தாய்லாந்து | 02.08.2016 - 04.08.2016 |
| 6 | திருமதி. எம்.என். அனோமா நந்தனி | பணிப்பாளர் | தன்னிறைவுப் பொருளாதார வட்டமேசை மாநாடு ஜீ - 77 | தாய்லாந்து | 28.02.2016 - 29.02.2016 |
| | | | பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள் நிகழ்ச்சித்திட்டம் | ஹொங்கொங் | 12.07.2016 - 16.07.2016 |
| 7 | திருமதி. பியங்கா என். கமகே | பணிப்பாளர் | அரசிறை மற்றும் படுகடன் முகாமை செயலமர்வு | மலேசியா | 13.06.2016 - 17.06.2016 |
| 8 | திருமதி. நாலனி அமரதுங்க | பணிப்பாளர் | சூழல் ஆபத்து மாற்றல் நிகழ்ச்சித்திட்டம் | இந்தோனேசியா | 17.10.2016 - 19.10.2016 |
| 9 | திருமதி. அஜித்தா படகொட | பணிப்பாளர் | நிதி நிகழ்ச்சித்திட்டமும் கொள்கைகளும் | சிங்கப்பூர் | 11.01.2016 - 22.01.2016 |
| | | | சுகாதார ஊக்குவிப்புக்கான முதலாவது SEARO செயலமர்வு | தாய்லாந்து | 27.07.2016 - 01.08.2016 |
| | | | மாநாடும் செயலமர்வு | தாய்லாந்து | 24.10.2016 - 27.10.2016 |
| 10 | திரு.ஏ.வி.ஜனாந்தர | பணிப்பாளர் | போசாக்குக்கான பொது நிதி நிகழ்ச்சித்திட்டம் | தாய்லாந்து | 25.04.2016 - 27.04.2016 |
| | | | பொது நிதி மற்றும் வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு | தாய்லாந்து | 05.09.2016 - 16.09.2016 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | திரு.ஏ.ஜி. நிசாந்த | பணிப்பாளர் | பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள் | ஹொங்கொங் | 12.07.2016 - 16.07.2016 |
| | | | முகாமைத்துவத்துக்கான சர்வதேச நிகழ்ச்சித்திட்டம் | தாய்லாந்து | 19.03.2017 - 26.03.2017 |
| 12 | திருமதி.எம்.ஏ.எம்.ஆரிபா | பணிப்பாளர் | வெளிநாட்டு நேரடி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் | சிங்கப்பூர் | 09.05.2016 - 13.05.2016 |
| 13 | திரு.எஸ்.ஐ.எம்.றோசா | உதவிப் பணிப்பாளர் | பொது நிதி மற்றும் வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு | தாய்லாந்து | 05.09.2016 - 16.09.2016 |
| 14 | திருமதி.டி.ஏ.எஸ். தஹநாயக | உதவிப் பணிப்பாளர் | பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள் | ஹொங்கொங் | 12.07.2016 - 16.07.2016 |
| | | | சூழல் ஆபத்து மாற்றல் நிகழ்ச்சித்திட்டம் | இந்தோனேசிய ா | 17.10.2016 - 19.10.2016 |
| 15 | திருமதி. இ.ஜி.எச்.எம். ரணசிங்க | உதவிப் பணிப்பாளர் | அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான தரவு வலையமைப்பு நிர்மாணம், அபிவிருத்தி உபாயங்கள் கணனி மயப்படுத்தல் பற்றிய செயலமர்வு | சீனா | 23.05.2016 - 12.06.2016 |
| | | | பேரண்டப் பொருளாதார கொள்கைகள் நிகழ்ச்சித் திட்டம் | ஹொங்கொங் | 01.08.2016 - 05.08.2016 |
| 16 | திருமதி.எச்.எல்.ஜே.கே.அமரசேகர | உதவிப் பணிப்பாளர் | நிதி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கொள்கைகள் | சிங்கப்பூர் | 22.02.2016 - 04.03.2016 |
| 17 | வை.ஏ.என்.துஷாரி | உதவிப் பணிப்பாளர் | முகாமைத்துவம் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் (கணக்காய்வு) | தாய்லாந்து | 24.07.2016 - 31.07.2016 |

### 5.2.2 உள்நாட்டு பயிற்சி நெறி

2016 ஆம் ஆண்டின்போது பின்வரும் பதவியணி உறுப்பினர்கள் பல்வேறுபட்ட துறைகளில் உள்நாட்டு பயிற்சிகளைப் பெற்றனர்.

| | பெயர் | பதவி | பயிற்சி நெறி | நிறுவகம் | காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | திருமதி.சி.பி.பிடிகல ஆராச்சி | முகாமைத்துவ உதவியாளர் | தாபன விதிக் கோவை தொடர்பான பயற்சி | பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு | ஒரு நாள் |
| | திருமதி.டி.சமரசிங்க | முகாமைத்துவ உதவியாளர் | | | |
| 2 | திரு.எச்.எம்.சி.கே.ஹேரத் | உதவிப் பணிப்பாளர் | நிதிச் சந்தை அறிமுகம் தொடர்பான பயிற்சிநெறி | நிதிக் கற்கைகளுக்கான அக்கடமி | 19.05.2016-20.05.2016 |
| 3 | திரு.கே.பி.டி.பி.கருணாநாயக | உதவிப் பணிப்பாளர் | வட்டி வீதங்கள் அறிமுகம் தொடர்பான பயிற்சிநெறி | நிதிக் கற்கைகளுக்கான அக்கடமி | 24.05.2016-25.05.2016 |
| 4 | திருமதி.என்.அமரதுங்க | பணிப்பாளர் | நிலையான வருமான பிணையங்கள் பற்றிய அறிமுகம் | நிதிக் கற்கைகளுக்கான அக்கடமி | 26.05.2016 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | திருமதி.எஸ்.ஏ.எல். சமரசேகர | உதவிப் பணிப்பாளர் | Forex பற்றிய அறிமுக பயிற்சி நெறி | நிதிக் கற்கைகளுக்கான அக்கடமி | 30.05.2016-03.06.2016 |
| 6 | திருமதி.டபிளியு.ஏ.என். துஷாரி | உதவிப் பணிப்பாளர் | ஆபத்து முகாமைத்துவ அறிமுகப் பயிற்சிநெறி | நிதிக் கற்கைகளுக்கான அக்கடமி | 31.05.2016 |
| 7 | திரு.எஸ்.ஐ.எம்.றோசா | உதவிப் பணிப்பாளர் | Bourse விளையாட்டு | நிதிக் கற்கைகளுக்கான அக்கடமி | 06.06.2016 |
| 8 | திருமதி.ஆர்.குகபாலன் | முகாமைத்துவ உதவியாளர் | அலுவலக முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிநெறி | மாவட்டச் செயலகம் கொழும்பு. | 09.06.2016 |
| | திருமதி.எஸ்.புஷ்பநாதன் | முகாமைத்துவ உதவியாளர் | | | |
| 9 | திருமதி.டபிள்யு.சி.குமுதினி | முகாமைத்துவ உதவியாளர் | தாபன விதிக்கோவை தொடர்பான பயிற்சிநெறி | பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு | One day |
| | திருமதி.சி.பி.தசநாயக்க | முகாமைத்துவ உதவியாளர் | | | |
| 10 | திருமதி.எஸ்.டி.எஸ். பெர்ணாந்து | நிருவாக அலுவலர் | ஆவண நிர்வாகம் தொடர்பான பயிற்சிநெறி | சுவடிக்கூட திணைக்களம் | One day |
| 11 | திரு.எஸ்.ஐ.எம்.றோசா | உதவிப் பணிப்பாளர் | கொள்வனவு தொடர்பான பயிற்சிநெறி | யு.எஸ்.எயிட் நிதியளிக்கப்பட்ட STAIR கருத்திட்டம் | 17.11.2016-25.11.2016 |
| | திருமதி.டபிளியு.ஏ.என்.துஷாரி | உதவிப் பணிப்பாளர் | | | 17.11.2016-25.11.2016 |
| | திருமதி.எஸ்.ஏ.எல்.சமரசேகர | உதவிப் பணிப்பாளர் | | | 17.11.2016-25.11.2016 |
| | திருமதி.எச்.எம்.சி.கே.ஹேரத் | உதவிப் பணிப்பாளர் | | | 17.11.2016-25.11.2016 |
| 12 | திரு.கே.டி.எஸ்.ருவாண்சந்திர | பணிப்பாளர் நாயகம் | இலங்கை மத்திய வங்கியின் இலத்திரனியல் முறைமையினைப் பயன்படுத்தி அரசாங்க நிறுவனங்களுக்கிடையில் நிதி மாற்றல் செயலமர்வு | தொலைத்தொடர்பு மற்றும் டிஜிற்றல் உட்கட்டமைப்பு அமைச்சு | 24.11.2016 |
| | திருமதி.எம்.ஏ.நந்தினி | பணிப்பாளர் | | | |
| 13 | திருமதி.டி.சி.ஏ.எம். கொஸ்தா | பணிப்பாளர் | கணக்காய்வு தரத்தினை அதிகரிப்பதற்கான பயிற்சிநெறி | இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தராதரங்கள் சபை | 29.11.2016 |
| | திருமதி.வை.பி.சுமனாவதி | பணிப்பாளர் | | | 30.11.2016 |
| | திரு.சி.ஜயசூரிய | பணிப்பாளர் | | | 29.11.2016 |
| | திருமதி.எம்.ஏ.நந்தினி | பணிப்பாளர் | | | 28.11.2016 |
| | திருமதி.பி.என்.கமஹே | பணிப்பாளர் | | | 28.11.2016 |

### 5.3. தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் நிதி நிருவாகம்

2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் சாதாரண செயற்பாடுகளுக்கான வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகள் செலவினத் தலைப்பு 240 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது. வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் கீழே குறிப்பிடப்பட்டவாறு நிகழ்ச்சித் திட்டம் 2 இன் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| (அ) | நிகழ்ச்சித்திட்டம் | 01 - தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் |
| | நிகழ்ச்சித்திட்டத்தின் கருத்திட்டம் 01 | 01 - வ.செ. திட்ட உருவாக்கல், கொள்கை |
| (ஆ) | நிகழ்ச்சித்திட்டம் | 02 - அபிவிருத்தி செயற்பாடுகள் |
| | நிகழ்ச்சித்திட்டத்தின் கருத்திட்டம் 02 | 02 - வ.செ. திட்ட ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் நானாவிதப் பொறுப்புக்கள். |

வரவு செலவுத்திட்ட உருவாக்கம் மற்றும் கொள்கைகள் மீதான திணைக்களத்தின் நிருவாகச் செலவினங்களுடன் தொடர்பான ஏற்பாடுகள் கருத்திட்டம் 01 இனால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற அதேவேளை, கருத்திட்டம் 02 ஆனது, பல்வேறு செலவின முகவராண்மைகளினால் தேவைப்படுத்தப்படும். எதிர்பாராத செலவினங்களுக்கும் 2016 வரவு செலவுத்திட்ட உரையில் அறிவிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட முன் மொழிவுகளின் செயற்படுத்துகை மற்றும் குறித்த நிதியாண்டிற்காக முன்னுரிமைக் கொள்கைகளாக அறிவிக்கப்பட்டவை என்பன தொடர்பான செலவினங்களுக்கும் வசதியளிப்பதற்கான ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்கின்றது.

2016 ஆம் ஆண்டின் அடிப்படை மதிப்பீடுகளுக்கு வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினால் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்காக ரூபா 632,107,300,000 ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**அட்டவணை 5.3.1: திணைக்கள செலவினத் தலைப்பின் கீழ் நிதி ஏற்பாட்டுப் பயன்பாடு**

| | | ரூபா. |
|---|---|---|
| (1) | நிகழ்ச்சித்திட்டம் 1 இன் கருத்திட்டம் 1 செலவினம் | 8,403,605,726 |
| (2) | நிகழ்ச்சித்திட்டம் 2 இன் கருத்திட்டம் 2 பிற செலவினத் தலைப்புகளுக்கான மாற்றல்கள் ஒதுக்கீடுகள் | 291,274,696,247 |
| | **மொத்தம்** | **299,678,301,973** |
| | **நிலுவை ஏற்பாடுகள்** | **332,428,998,027** |

### 5.3.1 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

முற்பணக் கணக்கு செயற்பாடுகளுக்கான உண்மையான செலவினம் மதிப்பிடப்பட்ட ஆகக் கூடிய செலவினமான ரூபா 24.55 பில்லியனுக்கெதிராக ரூபா 19.75 பில்லியனாக காணப்பட்ட அதேவேளை, உண்மையான மொத்தப் பெறுகையானது மதிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த பெறுகையான ரூபா 19.55 பில்லியனுக்கெதிராக ரூபா 22.65 பில்லியனாகக் காணப்பட்டது. இதற்கமைவாக, முற்பணக்கணக்குச் செயற்பாடுகள் 2015 இன் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்குள் காணப்பட்டது. முற்பணக்கணக்கின் கீழான செயற்பாடுகள் ஆதனக் கடன் நீங்களாக அரசாங்க ஊழியர்களுக்கான முற்பணங்கள் என்ற வகையில் வர்த்தக நோக்கம் கொண்ட செயற்பாடுகளையும் உள்ளடக்கியிருந்தது. அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த முற்பணங்கள் ரூபா 13.86 பில்லியனாகும்.

2005 ஆம் ஆண்டிலிருந்து அரசாங்க ஊழியர்களுக்கான ஆதனக் கடன்கள் மற்றும் வாகனக் கடன்கள் அரச வங்கிகளினூடாக மேற்கொள்ளப்பட்டது. 2016 ஆம் ஆண்டின்போது ரூபா 11.75 பில்லியன் ஆதனக் கடன்களாக அரசாங்க வங்கிகளின் மூலம் 12,649 அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது. அத்துடன் இக்கடன் வட்டிக்காக அரசாங்கம் ரூபா 2.47 பில்லியனை மானியமாக வழங்கியது.

**அட்டவணை 5.3.1 : அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு 2016**

| வகை | அனுமதிக்கப்பட்ட எல்லை 2016 (ரூபா) | உண்மை 2016 (ரூபா) |
|---|---|---|
| செலவின உச்ச எல்லை | 7,000,000.00 | 6,957,606.00 |
| கிடைப்பனவு உச்ச எல்லை | 5,000,000.00 | 5,064,273.50 |
| வரவு நிலுவை உச்ச எல்லைகள் | 25,000,000.00 | 21,250,043.26 |

*மூலம் : தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்*

2003.12.31 ஆம் திகதிய 114 இலக்க, வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், திணைக்கள செலவினத் தலைப்பிற்கு உட்பட முற்பணக் கணக்கு குறியீடு 240 - 011 இன் கீழ் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களை மாத்திரமே மேற்படி அட்டவணையிலுள்ள தரவுகள் உள்ளடங்கியுள்ளன. 118 ஆம் இலக்க, சுற்றறிக்கைக்கு ஏற்ப, பொது அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு நிலுவைகளை செலுத்தி முடிக்கும் நோக்கில் நிறுவனத்திற்கு உள்ளே மற்றும் வெளியே மாற்றப்பட்டிருந்த முற்பணக் கணக்கு குறியீடு 240 – 012 இன் கீழ் செலவினத் தலைப்புகளுடன் மேற்கொண்ட செலவு ரூபா 5,371,105.00 மற்றும் கிடைப்பனவு ரூபா 5,888,557.50 ஆகும். இதன் பிரகாரம், அரச அலுவலர்களின் அனுமதிக்கப்பட்ட முற்பணக் கணக்கு எல்லைகளுடன் திணைக்களம் உடன்பட்டுள்ளது.

**அட்டவணை 5.3.2 : வழங்கப்பட்ட கடன்கள் - 2016**


| கடன்கள்/முற்பணம் | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) |
|---|---|---|
| விழா முற்பணம் | 99 | 991,250 |
| விசேட முற்பணம் | 55 | 220,400 |
| இடர் மற்றும் சைக்கிள் கடன்கள் | 86 | 5,745,956 |
| **மொத்தம்** | **240** | **6,957,606** |

*மூலம் : தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்*

### 5.3.2 கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு வினாக்கள் 2016

2016 ஆம் ஆண்டின்போது கணக்காய்வாளர் நாயகத்தின் ஏழு (07) விசாரணைகள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அனைத்து விசாரணைகளுக்கும் விடையளிக்கப்பட்டன.

## 5.4 தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு (அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கமைவாக)




| | | |
|---|---|---|
| ப.நா - பணிப்பாளர் நாயகம் | மே.ப.நா - மே.ப.நாயகம் | க - கணக்காளர் |
| ப - பணப்பாளர் | பி.ப - பிரதிப் பணிப்பாளர் | நி.அ - நிருவாக அலுவலர் |
| உ.ப - உதவிப் பணிப்பாளர் | மு.உ - முகாமைத்துவ உதவியாளர் | மொ - மொழிபெயர்ப்பாளர் |
| வ.உ - வ.செ.தி.உதவியாளர் | அ.அ - அபிவிருத்தி அலுவலர் | த.தொ - தகவல் தொழில்நுட்பம் |